

# பனிமயம்

ஆகஸ்டு 2021

ஆண்டுச் சந்தா
ரூ. 50/-

தனிப் பிரதி
விலை ரூ. 5/-





## பனிமயத் தாயின் பாதத்திலிருந்து...

உங்கள் அனைவருக்கும் பனிமயத் தாயின் இனிய பெயரில் வாழ்த்துகள்!

இந்த இதழ் உங்கள் கைகளில் தவழும்போது பனிமய அன்னையின் 439ஆவது பெருவிழா நடைபெற்றுக்கொண்டிருக்கும். கடந்த ஆண்டு மக்கள் பங்கேற்பின்றியே பெருவிழா வழிபாடுகள் அனைத்தும் நடத்தப்பட்டன. இந்த ஆண்டு கடவுளின் பேரிரக்கத்தால், பனிமயத் தாயின் பரிவான பரிந்துரையால் பெருவிழாவில் மக்கள் பங்கேற்பு இருக்கும் என்பது எத்துணை மகிழ்ச்சியான செய்தி.

இப்பெருவிழாவுக்கு ஆயத்தமாக 25.06.2021 முதல் 24.07.2021 வரை நடைபெற்ற **30 நாள் தொடர் பரிந்துரை ஆராதனை** பல ஆசீர்வாதங்களை நமக்குப் பெற்றுத் தந்திருக்கிறது என்று நான் நம்புகிறேன். அதற்காக இறைவனுக்கு நன்றி செலுத்துகிறேன்.

இந்த ஆண்டு காணிக்கைப் பவனி, நற்கருணைப் பவனி, சப்பரப் பவனி ஆகியன நடைபெறாது. கொடியேற்ற வைபவமும் மக்கள் பங்கேற்பின்றியே இருக்கும். ஆனால், நவநாள் நாள்களில் சிறிய அளவில் மக்கள் பங்கேற்பு இருக்கும். அதற்கேற்ப வழிபாடுகளின் எண்ணிக்கை கூட்டப்பட்டுள்ளது. மேலும், வழிபாடு நடைபெறாத நேரங்களில் பேராலயம் திறந்து வைக்கப்பட்டு, இறைமக்கள் பனிமயத் தாயைத் தரிசித்து மன்றாட வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. இவை அனைத்தும் கடந்த ஆண்டோடு ஒப்பிடுகையில் மாபெரும் ஆசிர்வாதங்கள். எனவே, இறைவனைப் போற்றுவோம்.

முப்பது நாள் தொடர் பரிந்துரை மன்றாட்டுகளின் கனியாக இந்த ஆண்டு பெருவிழா நம் அனைவருக்கும் விண்ணக, மண்ணக அருள்கொடைகளை பெற்றுத் தருவதாக!

என்றும் அன்புடன்,
**அருள்பணி. குமார்ராஜா**
பங்குத் தந்தை & திருத்தல அதிபர்





உதயம் 21 தாரகை 12
பனிமயம்

நிர்வாகி & வெளியிடுபவர்
அருட்பணி. குமார்ராஜா
அதிபர் மற்றும் பங்குத்தந்தை,
தூய பனிமய அன்னை பேராலயம்,
தூத்துக்குடி

ஆசிரியர்:
அருட்பணி. குமார்ராஜா

**பனிமயம் விளம்பர விபரங்கள்**

| | |
|---|---|
| அரைப்பக்க விளம்பரம் | - ரூ. 500/- |
| முழுப்பக்க விளம்பரம் | - ரூ. 1000/- |
| பின் பக்க அட்டை உட்புற விளம்பரம் | - ரூ. 1500/- |
| பின் பக்க அட்டை வெளிப்புற விளம்பரம் | - ரூ. 2000/- |

வடிவமைத்து, அச்சிட்டோர்
R. சதீஷ் குமார்
ஷைனி ஆப்செட் பிரிண்டர்ஸ்
41C, பெரைரா தெரு, தூத்துக்குடி-1

ஆண்டுச் சந்தா ரூ. 50

முகவரி : ‘பனிமயம்’
தூய பனிமய அன்னை பேராலயம்
42, கடற்கரை வீதி, தூத்துக்குடி-628 001.
0461-2320854, 2330147, www.snowsbasilica.com

## இம்மாதத்திற்கான திருத்தந்தையின் செபக்கருத்து

### திருச்சபை

நற்செய்தியின் வெளிச்சத்தில் தன்னை சீர்திருத்திக் கொள்ளும் கிருபையையும் பலத்தையும் தூய ஆவியில் இருந்து பெறும்படி திருச்சபைக்காக மன்றாடுவோம்.

# உள்ளே...

1. “ஆழியின்மேல் ஒளிர் விண்மீனே!” ....................................4
அருள் மரி வேந்தன்

2. மரியன்னை புனிதர்கள் :
இறையடியார் பேராயர் ஃபுல்டன் ஷீன் ..................6
அருள்பணி. குமார்ராஜா

3. பனிமய அன்னை ..................................................................8
தி. சொர்ணராஜன் விக்டோரியா

4. பனிமய அன்னை பேராலய மலரும் நினைவுகள்... ......10
செல்வராஜ் மிராந்தா

5. பனிமயம் - மீள்பார்வை.........................................................12
கலாபன் வாஸ்

6. அறிவியலும், திருஅவையும்!...............................................14
“மிலியன்”

7. விவிலியப் போட்டி ..............................................................16

8. பனிமயப் பகிர்வு...................................................................18

9. மாதம் ஒரு மாதா படம் .........................................................25

மரியன்னையின் மேன்மைகள் : 18

மரியன்னை மன்றாட்டுகள் : 3

# "ஆழியின்மேல் ஒளிர் விண்மீனே!"



மரியன்னை மன்றாட்டுகளில் "மிகவும் இரக்கமுள்ள தாயே" மற்றும் "கிருபை தயாபத்துக்கு மாதாவாயிருக்கிற" என்னும் இரண்டு செபங்கள் முன்னணியில் இருக்கின்றன. ஆனால், அவற்றுக்கு இணையான சிறப்புகள் கொண்ட இன்னொரு மரியன்னை மன்றாட்டும் உள்ளது. அதுதான் "ஆழியின்மேல் ஒளிர் விண்மீனே".

மரியன்னையின் திருவிழாக்களின்போது மாலை ஆராதனையில் பாடப்படும் அழகிய பாடல்தான் இது. எட்டு, அல்லது ஒன்பதாம் நூற்றாண்டில் இலத்தீன் மொழியில் இயற்றப்பட்ட இந்தப் பாடல் அனைத்து மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. புனித பெர்நார்து இயற்றியதாகக் கருதப்பட்டாலும், இந்த அழகிய மன்றாட்டை எழுதியவர் யார் என்பது தெரியாது என்பதே உண்மை.

இலத்தீனில் "ஆவே மாரி ஸ்டெல்லா" என்றும், ஆங்கிலத்தில் "Hail bright star of Ocean" என்றும் தொடங்கும் இப்பாடல் அதன் எழில் கொஞ்சமும் குன்றாமல் "ஆழியின்மேல் ஒளிர் விண்மீனே" என்று அழகுற தமிழ்ப்படுத்தப்பட்டுள்ளது. இந்தப் பாடல் வரிகளின் இறையியல் மேன்மை அதன் வரிகளை ஆழ்ந்து ஆய்வு செய்தால்தான் புலப்படும்.

1. ஆழியின்மேல் ஒளிர் விண்மீனே
   அவனியில் இறைவனின் அன்னையும் நீ
   என்றும் கன்னிகை ஆனவளும்
   எழிலார் விண்ணக வாயிலும் நீ

**மரியா ஆழியின்மேல் ஒளிர் விண்மீன்.** வாக்குறுதியின் பெட்டகம், தாவீதின் குலமலர், தங்கமயமான ஆலயம் என அன்னை மரியாவுக்குச் சிறப்புப் பெயர்கள் ஏராளம் உள்ளன. ஆனால், ஆழியின்மேல் ஒளிர் விண்மீன், அல்லது விடியற்காலையின் விண்மீன் என்பது வசீகரமான அதே வேளையில் பொருள் செறிந்த ஒரு சிறப்புப் பெயராகும். இயேசுதான் உலகின் ஒளி, இருளகற்றும் கதிரவன் என்றால், அந்தக் கதிரவனின் வருகைக்குக் கட்டியம் கூறும் விடியற்காலைத் தாரகைதான் அன்னை மரியா என்பதே இந்தச் சிறப்புப் பெயர் தரும் இறையியல் செய்தி.

**மரியியல் நம்பிக்கை உண்மைகள்.** அன்னை மரியாவைப் பற்றிய விசுவாச உண்மைகள் நான்கு. அவற்றில் "அமல உற்பவி" என்பதும், "உடலோடும் ஆன்மாவோடும் விண்ணகம் எடுத்துக்கொள்ளப்பட்டவர்" என்பதும் 19 மற்றும் 20 ஆம் நூற்றாண்டுகளில்தான் நம்பிக்கைப் பேருண்மைகளாக அறிவிக்கப் பட்டன. ஆனால், "மரியா இறைவனின் தாய்" என்பது கி.பி. 431ஆம் ஆண்டின் எபேசு திருச்சங்கத்திலேயே அறிவிக்கப்பட்டு விட்டது. அத்துடன், மரியா "முப்பொழுதும் கன்னி" என்பதுவும் நான்காம் நூற்றாண்டில் இருந்தே அறிமுகமான ஒன்று. இந்த இரண்டு நம்பிக்கைப் பேருண்மைகளும் இப்பாடலில் இடம் பெற்றுள்ளன.



2. தூதுவன் வாழ்த்துரை ஏற்றாய் நீ
   தூய நல் அமைதியை அளிப்பாய் நீ
   ஆதியில் ஏவாள் செய்வினையை அகற்றி
   அவள் பெயர் மாற்றிடுவாய்

மரியா விவிலியம் காட்டும் வியத்தகு பெண். இப்பாடலின் மூல வடிவான இலத்தீன் மன்றாட்டில் "ஆவே" "ஏவா" என்ற சொல் விளையாட்டு இடம் பெற்றுள்ளது. ஆவே என்றால் "வாழ்க" என்றும், ஏவா என்றால் "ஏவாள்" என்றும் பொருள். முதல் பெண்ணான ஏவாள் செய்த கீழ்ப்படியாமை என்னும் பாவத்தின் விளைவைத் தமது கீழ்ப்படிதலால் மாற்றிய மரியா வாழ்க என்று வாழ்த்துகிறது இப்பாடல். அத்துடன், கபிரியேல் தூதரின் வாழ்த்துரையை ஏற்றதால், மானிட மீட்பில் மரியா பங்கு வகித்தார் என்றும் இப்பாடல் புகழ்கிறது.

4. தாயென உன்னைக் காட்டிடுவாய்
   தனயர் எமக்காய்ப் பிறந்தவரும்
   இயேசுவாய் உன்னிடம் உதித்தவரும்
   எம் குறை உம் வழி ஏற்றிடுவார்

**மரியா நம் பரிந்துரையாளர்.** அன்னை மரியா நமக்காகப் பரிந்து பேசும் ஒரு பரிந்துரையாளர் என்னும் உண்மை இந்த வரிகளில் நன்கு விளக்கப்பட்டுள்ளது. ஆர்வ மிகுதியால் அன்னையை அளவுக்கதிகமாகப் புகழ்ந்துவிடாத இறையியல் பக்குவத்தை இப்பாடல் நன்கு வெளிப்படுத்துகிறது.

6. புனித வாழ்க்கை வாழ்ந்திடவே
   பயணம் நன்கு முடிந்திடவே
   அதனால் இயேசுவை யாம் கண்டு
   அகமகிழ்ந்திடவே அருள்வாயே

**மரியா நம் பயணத்தில் பாதுகாவலி.** நமது வாழ்வுப் பயணத்தில் அன்னை மரியா ஓர் உடன் பயணி என்று நமக்கு நினைவூட்டுகிறது இப்பாடல். இதன் காரணமாக, இந்த மன்றாட்டு "பயணிகளின் செபம்" என்றும் அழைக்கப் படுகிறது. குறிப்பாக, கடலில் பயணம் செய்யும் மாலுமிகள் இந்த செபத்தை விரும்பி செபித்தனர். நமது வாழ்வே ஒரு பயணம் என்ற பார்வையில் நாம் அனைவருமே அன்னையின் அடைக்கலம் வேண்டி இந்த மன்றாட்டை நாள்தோறும் செபிக்கலாமே!

7. வானகத் தந்தையை வாழ்த்திடுவோம்
   வானுயர் கிறிஸ்துவை வணங்கிடுவோம்
   பரிசுத்த ஆவியைப் பணிந்திடுவோம்
   பாகுபாடற்ற புகழ் சாற்றிடுவோம்.

இந்தப் பாடலின் இறுதியில் மூவொரு கடவுளுக்குப் புகழ் சாற்றப்படுவதைத் தவறாது கவனியுங்கள். திருஅவையின் செப ஏடாம் திருப்புகழ் மாலையின் அனைத்துப் புகழ்ப்பாக்களும் மூவொரு கடவுளுக்குப் புகழ்சாற்றி நிறைவு செய்வதை மரபாகக் கொண்டுள்ளன. மரியன்னையின் புகழ்ப் பாடலும் அவ்வாறே நிறைவடைவது சாலச் சிறப்பு.

இறையியல் பார்வையில் இப்பாடல் மிகக் கச்சிதமான ஒரு மன்றாட்டு. அன்னையின் பெருமையை அளவுக்கதிகமாகப் புகழ்ந்து விடாமல், அதே வேளையில் அன்னையின் புகழுக்கு நியாயம் செய்யும் வகையில் அமைந்திருக்கும் இனிய கவிதை இப்பாடல் என்பதை இதர மரியன்னை மன்றாட்டு களுடன் ஒப்பிடும்போது உணரலாம்.

இந்த மன்றாட்டு எந்த அளவுக்கு மக்களிடையே பிரபலமானது என்றால் மேலை நாடுகளின் புகழ்பெற்ற இசை மேதைகள் பலரும் இப்பாடலுக்கு இசையமைத்து மகிழ்ந்துள்ளனர். எடுத்துக்காட்டாக, பாலஸ்ட்ரினா, டுஃபே, மோன்டேவெர்தி, தோரக் மற்றும் க்ரீக் ஆகிய இசை வல்லுநர்கள் இப்பாடலுக்கு மெட்டமைத்திருக்கின்றனர். தமிழிலும் இப்பாடலுக்கு நன்கு மெட்டு அமைக்கப்பட்டுள்ளது என்பதை நாமறிவோம்.


மாதாவை நோக்கிப் பல செபங்களை நாம் செபிக்கிறோம். ஆயிரம் ஆண்டுகள் பழமையான இந்த மன்றாட்டையும் நாம் நாள்தோறும் செபித்தால் என்ன? தமிழிலோ, ஆங்கிலத்திலோ, அல்லது இலத்தீன் மொழியிலோ, இந்த மன்றாட்டை மனப்பாடம் செய்து, அன்றாடம் அன்னை மரியாவைப் போற்ற முன்வருவோம்.

**அருள் மரி வேந்தன்**

# இறையடியார் பேராயர் ஃபுல்டன் ஷீன்

(1895 - 1979)

## அன்னையின் புகழை ஊடக வழி பரப்பியவர்



பேராயர் ஃபுல்டன் ஷீன்! இந்தப் பெயரைக் கேள்விப்படாத கத்தோலிக்கர்கள் மிகவும் குறைவு. வாழும் காலத்தில் வானொலி, தொலைக்காட்சி வழியாகவும், வாழ்வுக்குப் பின் அவர் எழுதிய ஆழமான நூல்களாலும் உலகப் புகழ் பெற்றவர். இன்று "இறையடியார்" என்ற நிலைக்கு உயர்த்தப்பட்டுள்ளார். நற்கருணை பக்தி மிகுந்தவர். தனது பல பணிகளுக்கு நடுவிலும் நாள்தோறும் ஒருமணி நேரம் நற்கருணை ஆண்டவரோடு செலவழிக்கத் தவறியதேயில்லை என சான்று பகர்ந்தவர். தமது சிற்றாலயத்தில் நற்கருணை ஆண்டவரின் பிரசன்னத்தில்தான் அவரது உயிர் பிரிந்தது என்பது ஒரு வியப்பின் தகவல்.

அமெரிக்காவின் இல்லினாய்ஸ் நகரில் நியூட்டன், டெலியா என்னும் ஐரிஷ் தம்பதியரின் நான்கு மகன்களில் மூத்தவராக 1895ஆம் ஆண்டு பிறந்தார் ஃபுல்டன் பீட்டர் ஜான் ஷீன். புனித மரியன்னைப் பேராலயத்தில் பீடப் பணியாளராகத் தன் அர்ப்பண வாழ்வைத் தொடங்கிய ஷீன், அருள்பணியாளராக விரும்பி குருமடத்தில் சேர்ந்து 1919ஆம் ஆண்டு குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். பெல்ஜியத்தின் லூவென் பல்கலைக்கழகத்தில் மெய்யியல் பயின்றபின், அமெரிக்காவின் கத்தோலிக்கப் பல்கலைக்கழகத்தில் 23 ஆண்டுகள் பேராசிரியராக, அறிஞராக, சொற்பொழிவாளராக, கல்வியாளராக, நற்செய்தி அறிவிப்பாளராகப் புகழுடன் பணியாற்றினார். 1934ஆம் ஆண்டு தமது 39ஆவது வயதில் திருத்தந்தை 11ஆம் பயஸ் அவர்களால் "மொன்சிஞ்ஞோர்" என்ற நிலைக்கு உயர்த்தப்பட்டார்.

1930 முதல் இருபது ஆண்டுகள் தொடர்ந்து வானொலியில் வாராந்திர ஆன்மிகச் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார். அத்துடன் நாடு முழுவதும் பயணம் செய்து உரைகள், தியானங்கள், ஆய்வுரைகள் வழங்கினார். ஏராளமாக எழுதினார். 1951ஆம் ஆண்டு ஆயராகத் திருநிலைப்படுத்தப்பட்ட ஃபுல்டன் ஷீனின் அடுத்த அத்தியாயம் தொலைக்காட்சியில் தொடங்கியது. அவரது தொலைக்காட்சி உரைகளை வாரந்தோறும் 30 மில்லியன் (3 கோடி) அமெரிக்கர்கள் பார்த்தனர். அவருக்கு "சிறந்த தொலைக்காட்சி ஆளுமை" என்னும் "எம்மி அவார்டு" வழங்கப்பட்டது. 20ஆம் நூற்றாண்டின் செல்வாக்கு மிக்க கத்தோலிக்கர் என்று "டைம்" இதழ் அட்டையில் அவரது படம் வந்தது.

1962-65 ஆண்டுகளில் இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் அனைத்துக் கூட்டங்களிலும் கலந்துகொண்டார். அப்போது



இறையியல் அறிஞராக விளங்கிய (பின்னாளில் திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட்) ஜோசப் ராட்சிங்கருடன் இணைந்து பணியாற்றினார். 1969ஆம் ஆண்டு திருத்தந்தை ஆறாம் பவுலால் பேராயராக உயர்த்தப்பட்டார். பணி நிறைவுக்குப் பின்னரும் நற்செய்தி அறிவிப்பு மற்றும் எழுத்துப் பணிகளில் ஈடுபட்டிருந்தார். அமெரிக்காவின் பிரபலங்கள் பலரைக் கத்தோலிக்கர்களாக மனமாற்றிய பெருமைக்கும் சொந்தக்காரர் இவர். நாள்தோறும் ஒரு மணி நேர நற்கருணை ஆராதனை மற்றும் மரியன்னை பக்தி இரண்டும் பேராயர் ஷீனின் தனித்துவங்களாக மிளிர்ந்தன. நற்கருணை ஆண்டவரின் பிரசன்னத்திலேயே 1979 டிசம்பர் 9ஆம் நாள் உயிர் நீத்தார். 2012ஆம் ஆண்டு இறையடியாராக அறிவிக்கப்பட்டார்.

அறுபதுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ள பேராயர் ஷீன், அன்னை மரியாவைப் பற்றிய ஆழமான கருத்துகளை அவற்றில் வெளிப்படுத்தியுள்ளார். "சிலுவையிலிருந்து இயேசுவின் கதறல்" என்னும் நூலில் அன்னை மரியாவை "இதோ உம் தாய்" என்று தம் சீடர் யோவானிடம் ஒப்படைத்த நிகழ்வை "இரண்டாம் தூதுரை" (Second Annunciation) என்றும், இதோ உம் மகன்ணி என்று யோவானை ஒப்படைத்ததை இரண்டாம் பிறப்பு (Second Nativity) என்றும் அழைக்கிறார்.

"அன்னை மரியாவிடம் இதுவரை செபிக்காதவர்கள் இனிமேல் செபிக்கும்படி பரிந்துரைக்கிறேன். அவரது வயிற்றில்தானே இயேசு உடலில் உருவாக்கப்பட்டார். அவரது ஊக்கத்தால்தானே 30 ஆண்டுகள் ஆன்மிக உருவாக்கம் பெற்றார். நாமும் இயேசுவாக உருவாக்கப்பட வேண்டுமென்றால் அன்னை மரியாவிடம்தானே மன்றாட வேண்டும்?" என்று வாதிட்டார் பேராயர் ஷீன்.

மரியன்னையின் அமல உற்பவத்தைப் பற்றி அழகான விளக்கங்கள் தந்துள்ளார் இந்த இறையடியார். ஒவ்வொரு மனிதருக்கும் இரண்டு தோற்றங்கள் இருக்கின்றன. நாம் எவ்வாறு தூயோராக வாழவேண்டும் என்னும் கடவுளின் பார்வையில் நமது தோற்றம். மற்றொன்று நாமே தேர்ந்துகொண்டு நம் வாழ்வை அமைத்துக்கொள்ளும் நமது தோற்றம். எல்லா மனிதர்களுக்கும் இந்த இரண்டு தோற்றங்களுக்கும் இடையே சிறிய அல்லது பெரிய இடைவெளி அல்லது மாற்றங்கள் இருக்கின்றன. அன்னை மரியாவுக்கு மட்டும்தான் கடவுளின் விருப்ப தோற்றத்துக்கும், அன்னையின் வாழ்வின் தோற்றத்துக்கும் எந்த வேறுபாடும் இல்லாமல் இருக்கின்றன. இதுவே அன்னையின் சிறப்பு. இந்த அருளை கடவுளே மரியாவுக்கு வழங்கினார். இதுவே அமல உற்பவம் என்னும் இந்த விளக்கம் எத்துணை எளிமையாக இருக்கிறது!

பேராயர் ஷீன் அன்னை மரியாவை அடிக்கடி "நான் நேசிக்கும் பெண்" என்று சொல்வதுண்டு. அன்னை மரியா பற்றி அவர் எழுதிய "உலகின் முதல் அன்பு" என்னும் நூலின் அணிந்துரையில் அன்னை மரியாவை இப்படிப் போற்றுகிறார் ஷீன். "உலகம் தோன்றும் முன்னே கடவுளே கனவில் கண்ட பெண். சிலுவையின் துயரத்திலும், வலியிலும் என்னைப் பெற்றெடுத்த பெண். சிலுவையின் அடியில் இயேசுவைப் பார்த்து 'இது என் உடல், இது என் இரத்தம்' என்று சொல்ல முடிந்த ஒரே பெண்". என்னே கற்பனை! என்னே தாயன்பு!

நமது காலத்தில் நற்கருணை பற்றியும், அன்னை மரியா பற்றியும் இவரைவிட அதிகமாக, அழகாக யாரும் எழுதிவிடவில்லை, போதிக்கவில்லை என்பதே பேராயர் ஃபுல்டன் ஷீனின் மிகப் பெரும் பெருமை. அவரால் உந்துதல் பெற்று நாமும் இந்தத் தாயை அன்பு செய்வோமாக!



**அருள்பணி. குமார்ராஜா**

பனிமய அன்னை 10

# தீவில் ஓர் ஆலயம்

### மதுரை நாயக்கனின் படையெடுப்பு

1603 ஆம் ஆண்டிலிருந்து தூத்துக்குடி பரவ மக்களுக்கு சோதனை காலம் தொடங்கியது. 1603 ஆம் ஆண்டில் மதுரை ஆண்ட **முத்துக்கிருஷ்ணப்ப நாயக்கன்** (1601-09) முத்துக்குளித்துறை பரவ மக்கள் மீது 6,000 பணம் என்னும் அநியாய வரியொன்றை விதித்தான். அவ்வாண்டில் முத்துக்குளிப்பு மிகவும் மோசமாக இருந்தது. ஆதலால் மக்கள் வரியை செலுத்தமுடியமல் தவித்தனர்.

இதனை அறிந்த மதுரை நாயக்கன் ஆத்திரமுற்று தனது சிற்றரசனான கயத்தாறு மன்னனுடனும், விஜயநகரப் பேரரசனின் வடுகர் படையினருடனும் சேர்ந்து 3000 படை வீரர்களோடு வந்து தூத்துக்குடி மீது படையெடுத்தான்.

தூத்துக்குடியைத் தாக்கிய படை, இயேசு சபைத் தலைமை இல்லத்தை இடித்துத் தகர்த்தது. பனிமய அன்னையின் ஆலயத்திற்கும் குருமடத்திற்கும் நெருப்பு வைத்து, ஆலயத்தின் விலையுயர்ந்த திருவழிப்பாட்டுச் சாமான்களை சூறையாடியது.

பதினெட்டு நாட்களாகத் தூத்துக்குடியை முற்றுகையிட்ட மதுரை நாயக்கனும், கயத்தாறு குறுநில மன்னனும், இயேசு சபைத் தலைமையில்லத்தின் பொருளாளரான **சுவாமி கஸ்பார் தப்ரோ** (Gaspar De Abreu)வை பிணைக்கைதியாக மதுரைக்கு கொண்டு சென்றனர்.

### பரவ குல பேரவையின் கூட்டம்

பனிமய அன்னை ஆலயத்திற்கும் தூத்துக்குடி மக்களுக்கும் நேரிட்ட துயரங்களை கண்டு வேதனையுற்ற பரவகுல சாதித் தலைவனும், ஏழு கடற்றுரையின் பட்டங்கட்டிகள் என்னும் ஊர்த் தலைவர்களும் புன்னைக்காயலில் கூடினார்கள். அங்கு கூடிய பேரவையின் தீர்மானப்படி, பரவ மக்களின் சார்பில் **சிவந்திநாத பிள்ளை** என்னும் அதிகாரியை கயத்தாறு குறுநில மன்னனிடம் தூது அனுப்பினர். மதுரை நாயக்கன் விதித்த வரியை குறைக்கும்படி அந்த அதிகாரி கயத்தாறு மன்னனிடம் பரிந்து பேச, மன்னன் வரியைக் குறைக்க மறுத்துவிட்டான். மீண்டும் புன்னைக்காயலில் பரவ குல பேரவையினர் கூடினர்.

### பாண்டியன் தீவில் குடியேற்றம்

பேரவையில் பரவ குலத் தலைவர்கள் நிறைவேற்றிய தீர்மானத்தின்படி, தூத்துக்குடி-வைப்பார்-வேம்பார் ஆகிய ஊர்களிலுள்ள கிறிஸ்தவ மக்களும், மற்றும் பாதுகாப்பு தேடும் பிறமத மக்களும், மதுரை நாயக்கன், கயத்தாறு குறுநில மன்னன் ஆகியோரின் ஓயாத கொடுமைகளிலிருந்து நிரந்தரமாகத் தப்பிக்கும் வகையில், 1604 ஆம் ஆண்டில் தூத்துக்குடிக்கு எதிரேயுள்ள பாண்டியன் தீவில் குடியேறினர். அவர்களுக்கு இயேசு சபைக் குருக்களும் கோவா போர்த்துக்கீசிய ஆளுநர் **ஐரஸ் டி சூசா** என்பவரும் உதவினார்கள்.

பரவகுல சிற்றரசரான முத்துக்குளித் துறையின் சாதித் தலைவருக்கு சொந்தமான **'பாண்டியன் தீவு'** ராஜ தீவு என்றும், இன்றைய காலங்களில் முயல் தீவு (Ilha des Lebres, Hare Island) என்றும் அழைக்கப்பட்டு வருகின்றது.

பாண்டியன் தீவில் குடியேறிய மக்களின் எண்ணிக்கை 10,000க்கும் மேலாகும். அவர்கள் அனைவரும் மதுரை நாயக்கன் மற்றும் கயத்தாறு மன்னர்களின் குடிமக்கள் அல்ல என்று அறிக்கையிட்டனர்.

தூத்துக்குடியில் இயேசு சபைத் தலைமை இல்லம் இடித்துத் தகர்த்தப்பட்டதால், இயேசு சபையினர் தங்களது தலைமை இல்லத்தை பாண்டியன் தீவுக்கு மாற்றினர்.



### தீவில் ஓர் ஆலயம்

இயேசு சபையினர் பாண்டியன் தீவில் தங்களது தலைமை இல்லத்திற்கு அருகே ஓர் ஆலயத்தை உருவாக்க எண்ணினர்.

1604 ஆம் ஆண்டு ஜூலை 2 ஆம் நாளன்று, தேவதாய் எலிசபெத்தம்மாளை **மினவின திருநாள**ன்று, கொச்சி இயேசு சபை மாநிலத்தலைவர் **ஆல்பர்ட் லெர்சியோ,** (Albert Laerzio) புதிய ஆலயத்திற்கு அடிக்கல் நாட்டினார். பரவ மக்களின் தாராள நன்கொடையால், கற்களால் உருவான ஆலயம் 1606 ஆம் ஆண்டு நிறைவு பெற்றது.

அன்னை மரியாளுக்கு அர்ப்பணிக்கப் பட்ட இந்த புதிய ஆலயம், **'தேவ மாதா ஆலயம்'** (Madre de Deos) என்று அழைக்கப்பட்டு இயேசு சபைக் குருவொருவரின் பொறுப்பில் **தேவ மாதா பங்கு** என்ற தனிப்பங்காக விளங்கியது. தேவமாதாவின் புதிய ஆலயத்தில் தூத்துக்குடி பனிமய அன்னை ஆலயத்திலிந்து பரவ மக்களால் பத்திரப்படுத்தப்பட்ட அன்னையின் திருச்சுரூபத்தை, பரவ மக்கள் ஆடம்பரமாக நிறுவினர்.

1600 ஆம் ஆண்டில் கொச்சியிலுள்ள இயேசு சபைத் தலைமை இல்லத்திலிருந்து மாற்றலாகி, தூத்துக்குடி சம்பவுல் இயேசு சபைத் தலைமை இல்லத்திற்கு சகோதரர் வணக்கத்திற்குரிய **பேதுரு தி பாஸ்து** (Petro de Pastu) என்பவர் வந்தார். 1600 ஆம் ஆண்டு முதல் 1617 ஆம் ஆண்டு வரை பதினேழு ஆண்டுகள் தலைமையில்லத்தில் பணிபுரிந்த இவர், பாண்டியன் தீவிலும் பணிபுரிந்தார்.

அன்னை மரியாள் மீது தனிப்பற்றுதல் வைத்திருந்த சகோதரர் பேதுரு தி பாஸ்து, தினந்தோறும் பனிமய அன்னையின் அற்புத சுரூபத்திற்கு முன் மண்டியிட்டு மன்றாடுவார். பனிமய அன்னை பல முறை இவருக்கு காட்சி அளித்ததாக, இவரது வாழ்க்கை வரலாற்றை எழுதிய இயேசு சபை அறிஞர் **குய்ரோஸ்** (Queyorz.F) கூறுகிறார்.

சகோதரர் பேதுரு பாஸ்துவுக்குப் பாப்பரசர் **முத்திப்பேறு பட்டம்** வழங்குவற்கு, தூத்துக்குடி பனிமய அன்னை அவருக்குத் தந்த காட்சிகளே முக்கிய காரணம் என்பது குறிப்பிடத்தக்கது.

### கொச்சி ஆயருடன் விரோதம்

கொச்சி **ஆயர் அந்திரேயாஸ்** (Dom Andrea De Santa Maria, 1588 -1610) இலங்கைக்குச் சென்றிருந்த வேளையில்தான், முத்துக்குளித் துறை பரவ மக்கள் பாண்டியன் தீவில் குடியேறினர். முத்துக்குளித்துறையின் பரவ மக்கள் இயேசு சபையினரால் கண்காணிக்கப் பட்டாலும், முத்துக்குளித்துறை கொச்சி ஆயரின் ஞான அதிகாரத்தின் கீழ்தான் இருந்தது.

முத்துக்குளித்துறை மக்களும் இயேசு சபையினரும் பாண்டியன் தீவில் குடியேறியது தனது ஞான அதிகாரத்தில் இருந்து தப்பிக்கத்தான் எனத் தவறாக கொச்சி ஆயர் அந்திரேயாஸ் புரிந்துகொண்டார். எனவே, பாண்டியன் தீவில் குடியேறிய அனைவரையும் தங்களது சொந்த ஊர்களுக்கு திரும்புமாறு ஆயர் அவர்கள் ஆணை யிட்டார். மதுரை நாயக்கன் மூலம் மீண்டும் ஆபத்து நேரலாம் என அஞ்சிய பரவ மக்கள் பாண்டியன் தீவை விட்டு வெளியேற மறுத்துவிட்டனர்.

கொச்சி ஆயர், பரவ மக்களின் மறுப்பினைக் கேள்விப்பட்டு, பாண்டியன் தீவில் இருந்த கிறிஸ்தவ பரவ மக்களையும் இயேசு சபையினரையும் திருச்சபையிலிருந்து விலக்கம் செய்தார். ஆயர் தனது பிரான்சிஸ்கு சபையைச் (OFM-Order of Friars, Minor Franciscans) சேர்ந்த **மனுவேல் தி எல்வஸ்** (Manuel de Elvis) என்னும் குருவை முத்துக் குளித்துறையின் தலைமைக் குருவாக நியமனம் செய்து, பாண்டியன் தீவுக்கு அனுப்பி வைத்தார். பாண்டியன் தீவில் உள்ள மக்களை வெளியேற்ற இந்தப் புதிய குரு எடுத்த முயற்சிகள் ஏதும் பயனளிக்கவில்லை.

*- (தொடரும்)*



**தி. சொர்ணராஜன் விக்டோரியா**



# 3 பனிமய அன்னை பேராலய மலரும் நினைவுகள்...

## (1930 - 1954)

அருள்தந்தை அந்தோணி பர்னாந்து சுவாமி மாற்றப்பட்டதைத் தொடர்ந்து 1938ஆம் ஆண்டு முதல் அருள்தந்தை அம்புரோஸ் மிசியர் ஒரு இடைக்கால ஏற்பாடாக ஓராண்டு காலமும் அவரைத் தொடர்ந்து 1939ஆம் ஆண்டு முதல் அருள்தந்தை G. மைக்கிள் அடிகளார் ஓராண்டு காலமும், அவருக்குப் பின் 1940 முதல் 1941 வரை அருள்தந்தை T. மைக்கல் அடிகளார் ஓராண்டு காலமும் என இரண்டு மைக்கல் அடிகளார்கள் பணியாற்றியதாகக் குறிப்புகள் கூறுகின்றன.

ஒரு பங்கின் பணிக்களத்தையும் அம்மக்களின் ஆன்மீக லெளகீக தேவைகளையும் அறிந்துகொண்டு செயல்பட ஓராண்டு காலம் என்பது மிகக் குறுகிய இடைவெளி என்பது மறைமாவட்ட நிர்வாகம் அறிந்திராத ஒன்றல்ல. அன்று நிலவிய அசாதாரண சூழ்நிலையின் அழுத்தங்கள் காரணமாய் இருந்திருக்கலாம். அன்று உலக நாடுகளனைத்தும் உருக்குலைந்து கொண்டிருந்த நேரம். அதன் தாக்கமாகக்கூட இருந்திருக்கலாம்.

"Man is a fighting animal - A Nation is therefore a fighting unit - A Nation that does not fight will therefore rust and perish" என்ற நாசிசச் சித்தாந்தத்தோடு ஜெர்மனியின் ஆட்சியைக் கைப்பற்றிய ஹிட்லர் (Adolf Hitler) போலந்தின்மேல் (Polish Corridor) படையெடுத்துப் பிடித்ததைத் தொடர்ந்து 1939இல் இரண்டாம் உலகப்போர் மூண்டது. பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா ஆகிய நாடுகள் (The Allied Forces) நேச நாடுகள் என்றும் அவற்றிற்கு எதிராக (Rome, Berlin, Tokyo) இத்தாலி, ஜெர்மனி, ஜப்பான் ஆகியவை (Axis) அச்சு நாடுகள் என்றும் இரண்டாம் உலகப் பெரும்போர் வெடித்தது. பிரிட்டனின் காலனி நாடுகளான இந்தியா (இன்றைய இந்திய பாகிஸ்தான், வங்கதேசம் சேர்ந்தது) பர்மா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, ஆக்லாந்து போன்றவையும் போரில் இறங்கின. பிரிட்டனின் ஆதிக்கத்தின் கீழிருந்த இலங்கையின் துறைமுகங்களான கொழும்பு, திரிகோணமலை போன்றவை உலகின் கிழக்குக் கடல்வழித் தடத்தின் கேந்திரமாக இருந்த காரணத்தால், பர்மா, அந்தமான் தீவுகள் வரை முன்னேறிய ஜப்பானிய படைகள் இலங்கையைத் தாக்கியதால் அதை எதிர்கொள்ள தூத்துக்குடி தயார்படுத்தப்பட்டது. கயத்தாரில் விமானத்தளம் அமைக்கப்பட்டது. இன்று



மரியன்னைக் கல்லூரி இருக்கும் இடம் முன்பு Volkart Brosக்கு சொந்தமாயிருந்தது. அங்கு பிரிட்டிஷ் நேவி முகாமிட்டிருந்தது. கடற்கரை சாலையில் இன்று Bell Hotel இருக்கும் இடமும், மூன்றாம் மைல் என்று அப்போது அழைக்கப்பட்ட இன்றைய சங்கர் நகர் (பாளையங்கோட்டை ரோட்டிலிருக்கும் மேம்பாலத்தின் கீழ் உள்ள இடம்) ஆகிய இடங்களில் மிலிட்டரி கேம்ப்பும், கடற்கரை சாலை Crows Bungalow (அதாவது (Marine Training Centre)க்கு தெற்கே MES என்றழைக்கப்பட்ட மிலிட்டரி இஞ்சினியரிங் சர்வீஸ் பில் டாங்குகள் நிறுத்தப்பட்டிருந்தன.

எதிரி நாட்டு விமானங்கள் வான்வழித் தாக்குதல் தொடங்கினால் மக்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென்பதற்கு பயிற்றுவிக்கும் ஒத்திகைகளாக யாரும் எதிர்பாராத நேரங்களில் சைரன் (Siren) ஒலிக்கும். அதைக் கேட்டதும் மக்களெல்லாம் வீடுகளுக்குள்ளும், வெளியே கட்டப் பட்டிருந்த பதுங்கு குழிகளுக்குள்ளும் படுத்துக் கொள்ள வேண்டும். அப்போது மனித நடமாட்டமில்லாத வெறுமையாக ஊர் அடங்கியிருக்கும்.

அருள்தந்தை பவுல் அலங்காரம் அடிகள் 1942ஆம் ஆண்டு பரிசுத்த பனிமய அன்னை ஆலயப் பங்கு குருவாக பொறுப்பேற்றபோது அத்தகைய சூழ்நிலைதான் நிலவியது. மிகுந்த பொறுமையோடும் திறமையோடும் பங்கை நிர்வாகம் செய்து பத்தாண்டு காலம் பணியாற்றி 1952ஆம் ஆண்டு மாறிச் சென்றார்கள். அவர் பொறுப்பேற்றபோது எட்டு வயதே நிரம்பியிருந்த கட்டுரையாளராகிய நான் முதலில் ஆல்டர் பாயாகவும் (Altar Boy) பிறகு பாடகர் குழு உறுப்பினராகவும் பணியாற்றிய காரணத்தால் பல நிகழ்வுகள் இன்றுவரை நினைவில் நிழலாடுகின்றன. 1952ஆம் ஆண்டு தந்தையவர்கள் மாறிப்போன பின்பு சில காலம் தொடர்பில்லாமல் இருந்தாலும் அவ்வப்போது தூத்துக்குடியில் காணும் போதெல்லாம் அவர் சொல்லும் பணிகளைச் செய்து முடித்ததுண்டு. தந்தை அவர்கள் தனது இறுதிநாட்கள் வரை என் ஆன்ம குருவாக அன்பொழுக கண்டிப்புடன் அவர் வழிகாட்டுதலில் கூடுமானவரை வாழ முயற்சித்ததால் பல நிகழ்வுகளின் செய்தியை என்னோடு பகிர்ந்திருக்கிறார்.

அந்தக் காலத்தில் தூத்துக்குடியில் இரண்டே பங்கு ஆலயங்கள்தான் இருந்தன. பரிசுத்த பனிமய அன்னை ஆலயம் பொதுவாக பெரிய கோவில் என்றழைக்கப் பட்டது. மற்றொன்று சின்னக்கோயில் என்றழைக்கப்பட்ட திரு இருதயங்களின் மேற்றிராசனக் கோயில். ஆண்களுக்கென்று இரண்டு கத்தோலிக்கப் பள்ளிக்கூடங்கள் இருந்தன. எட்டாம் வகுப்பு என்று சொல்லப்பட்ட III Form வரையிருந்த P.M. Ornallas Middle School பனிமய அன்னை ஆலயப் பங்கிலும், பதினோராம் வகுப்பு அல்லது School final என்றும் S.S.L.C. என்றும் அழைக்கப்பட்ட VI Form வரையிருந்த St. Francis Xavier High School திரு இருதயங்கள் ஆலய வளாகத்தில் இயேசு சபை குருக்களால் நடத்தப்பட்டதும் இருந்தன.

மாதா கோயில் பங்கில் பிறந்த பையன்களை சேவியர்ஸ் பள்ளியில் ஒன்பதாம் வகுப்புக்குக் கீழ் சேர்க்க மாட்டார்கள். ஒன்பதாம் வகுப்பில் சேர்ந்து படித்தாலும் ஒரு வருடம் தேர்வில் தோல்வியடையச் செய்வார்கள். இதை கவனித்த அருள்தந்தை அலங்காரம், இலங்கையில் சலேசியன் சகோதரர்களால் நடத்தப்பட்ட கொழும்பு பெனடிக்ட்ஸ் காலேஜில் ஆங்கிலம், கணக்கு ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்த திரு. மெல்சன் வில்லவராயரை வருத்தி P.M. Ornallas தலைமையாசிரியராய் நியமித்தார்கள். P.M. Ornallas பள்ளிக்கூடத்தை High School ஆக்க வேண்டும் என அருட்தந்தை எடுத்த முயற்சிகள் எல்லாம் நிறைவேறவில்லை. பள்ளிக்கூடத்துக்கென விளையாட்டு மைதானம், அதுபோன்ற பல உள்கட்டமைப்பு (Infra structure) குறைபாடுகளே காரணமாய் இருந்தன.

– தொடரும்.



**செல்வராஜ் மிராந்தா**

# 'பனிமயம்' – மீள் பார்வை 23

2004

## அன்னைக்கு நன்றி

நமதன்னையின் திருச்சுரூப வருகையைப் பற்றி, 1986ஆம் ஆண்டில், மாதா பக்தர்களைக் குழப்பத்தில் ஆழ்த்தும் ஒரு தவறான சரித்திரம் வரையப்பட்டது. அதனால், இத்திருச் சுரூபம் நமது ஞானத்தந்தை புனித சவேரியாரால் நமக்கு அளிக்கப்பட்டது அல்ல எனும் மாயையைத் தோற்றுவித்ததினால், அன்னையின் பக்தர்கள் ஒருவித மனக் குழப்பத்தில் இருந்து வந்தோம்.



இந்தக் குழப்பத்திற்குத் தீர்வு காட்டும்படி, அன்னையைப் பிரார்த்தித்து வந்தோம்.

2004 ஆகஸ்டு மாதம் 8ஆம் தேதி மாலை, பேராலயத்தின் நிகழ்ச்சியின்போது, இவ்வாண்டினை நமது அன்னை இங்கு வந்தடைந்த 450ஆண்டிற்கான யூபிலி ஆண்டாக, நமது பேராலய அதிபர் **பேரருட்திரு. ஜெரோசின் அ.கற்றார்** மூலமாக அறிவிக்கச் செய்து, அற்புதம் நிகழ்த்தி, பிரச்சனைக்கு முற்றுப்புள்ளி வைத்த எமது அன்னைக்கு நம் நன்றியைத் தெரிவிப்போம். – **அன்னையின் மைந்தன் பெர்க்மான்ஸ் மோத்தா.**

## மாதிரி காட்டும் தாய்

விசுவாசம் மிகுந்தார்க்கு தாயாய் இருக்கின்றாள்
எத் தேசத்தவர்க்கும் அவள் பொருந்துவாள்!
உத்தேசமாக கோடிக்கும் மேலாக
சந்தோசம் மலர்வித்த வரலாறு சான்றாகும்!
வாசல் திறந்து பிரசன்னமாகு ஒளியாம்
தாசரை நேசிக்கும் பெருந்தகை மாதா!
நீசர் அணுகா வண்ணம் சாவிலிருந்து
உதவும் நல்லிதயம் கொண்டிருந்தாள்!

– A.F. மாறன்

## வளமான வாழ்வு

"கடவுள் அன்பாய் இருக்கிறார். நாம் வாழ்வு பெறும் பொருட்டு கடவுள் தம் ஒரே மகனை உலகிற்கு அனுப்பினார். இதனால் கடவுள் நம்மீது அன்பு கொண்டாரென்றால், நாமும் ஒருவர் மற்றவர்மீது அன்பு கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றோம்" (யோவான் 4:8-10). இந்த இறை வார்த்தையின் அடிப்படையில், ஒருவர்மீது ஒருவர் அன்பு கொள்ளும் **அன்புச் சமூகங்கள் எங்கும் உருவாக வேண்டும். இத்தகைய அன்புச் சமூகங்களின் வளர்ச்சியில் தான், மனுக்குலத்தின் வளர்ச்சியே அடங்கி யுள்ளது. – அருட்தந்தை J. இரத்தினராஜ்**

## பொதுநிலையினர் என்றால் என்ன?

திருப்பட்டங்கள் பெறாமல், திருமுழுக்கு, உறுதிப்பூசுதல் போன்ற அருள் அடையாளங்கள் பெற்ற அனைவரும் பொது நிலையினரே. திருச்சபை என்பது இறைமக்களின் கூட்டம். பொதுநிலையினர் என்றால் இணைந்து, கிறிஸ்துவினால் வழி நடத்தப்படும் திருக்கூட்டம். **'இறைவனுக்குச் சொந்தமான மக்கள்'** – என்று கூறப்பட்ட கூற்றும் பொதுநிலையினரைக் குறித்தே. – **அருட்பணி கி. ஆல்பர்ட்.**

**வழியனுப்பும், வரவேற்பும்**

**பேரருட்திரு. ஜோசப் இரத்தினராஜ்** அடிகளார், ஏறக்குறைய ஐந்தாண்டுப் பணி நிறைவில், **தூத்துக்குடி மறைமாவட்டத்தின் முதன்மைக் குரு**வாகப் பொறுப்பேற்கிறார். அவர்களுக்கு நன்றியுடன் வாழ்த்துகளைத் தெரிவிக்கிறோம்.

**பேரருட்திரு. ஜெரோசின் அ.கற்றார்** அடிகளார், தூய பனிமய அன்னை திருத்தலப் பேராலய அதிபராகவும், **'பனிமயம்'** மாத இதழின் நிர்வாக மேலாளராகவும் பொறுப்பேற்கின்றார்கள். வருக, வருக என்று வாழ்த்தி வரவேற்கிறோம். - **கலாபன் வாஸ்,** பனிமயம் பொறுப்பாசிரியர்.

**பனிமயத் தாயின் திருக்கொடி**

அருள் நிறைந்தவளே, நின் காருண்யம்
அமுதூட்டி, ஜீவ கோடிகளை காக்கயிலே,
அகந்தை யெனும் குணம் நீங்கி
அதிசயங்கள் பல நடக்குதம்மா!
முத்துநகர் பாதுகாவலியே, நின் ஆசி
முகமுகமாய் தரிசனங்கள் தருகையிலே,
முடக்க மெனும் தொல்லை நீங்கி,
பனிமயத் தாயின் திருக்கொடி பாரீர்.....

**- திருமதி. டயானா வியானி டிரோஸ்**

**பனிமய அன்னை செபமும், பாடலும்**

1806ஆம் ஆண்டில் நிகழ்ந்த **முதல் தேர்ப் பவனி**க்காக 15 தேவ இரகசியங்கள் எழுதப் பட்டதாகத் தெரிகிறது.... தற்போது **'தேர் சுஸ்'** எனும் பிற்பகல் ஆராதனைகளில் சொல்லப் படும் செபமாலைக்கு மாத்திரமே "வியாகூலம் மிக்க மாதாவே" என்று ஆரம்பிக்கும் துக்க தேவ இரகசியத்தின் செபங்கள் இந்நாள் வரை சொல்லப்பட்டு வருகிறது. மங்கள தேவ இரகசிய செபங்களும், மகிமை தேவ இரகசியங்களின் செபங்களும் வழக்கத்தில் இல்லாமல் போய்விட்டன.

புனித சவேரியாரால் நமக்கு அளிக்கப் பட்ட நமது பாதுகாவலியின் புனித சுரூபத்திற்கு, அந்நாளில், திவ்விய நற்கருணைக்குச் செலுத்தப்படும் அதே பக்தி வணக்கத்தை செலுத்தி வந்துள்ளோம். திவ்விய நற்கருணையைப் போலவே, நமது அன்னையின் திருச் சுரூபத்தை, ஆராதனை நேரம் தவிர மற்ற நேரங்களில் திரைச் சீலையிட்டு மறைத்து வைக்கும் வழக்கம் சமீப காலம் வரை இருந்து வந்துள்ளதே இதற்கு ஆதாரம். இத்தகைய மகிமை மிக்க நமதன்னையின் பெருவிழா, ஆலயத்தில் பிரகடனப்படுத்துவதற்காக, நற்கருணை விருந்து முடிந்த பின்னர், குருக்கள் அனைவரும் ஆசனத்தில் அமர்ந்திருக்க, ஓர் அமைதியான சூழ்நிலையில், திருவிழா அறிக்கையிடப்படும். அதனைத் தொடர்ந்து அனைவரும் முழந்தாள்படியிட்டு, போர்த்துக்கீசியர் நமக்கு விட்டுச் சென்ற, **'லோவாதோ சேஜா'** (LOUADO SEJA) எனும் உருக்கமான போர்த்துக்கீசிய மொழிப்பாடல் பாடப்படும்.

இப்பாடல் தவறாக உச்சரிக்கப்பட்டு வந்ததால், 1917ஆம் ஆண்டு நமது ஆலயத்தின் விக்காராய் (VICAR) இருந்த **அதி சங்கைக்குரிய A. மோனிஸ் அடிகள்,** பிழையின்றி எழுதித் தந்துள்ளார்கள்.

லோவாதோ சேயா! லோவாதோ சேயா!
ஓ! சாங்த்தீசிமா, சாக்ர மெந்தோ!
இய இமாகுலா - தோகொன் - செய்காஸ்
தா விர்கம் மரியா, சிங்ஞோரா நோஸ்ஸா!
கொன் செபிதெ செம்மாகுலா (2) (BIS)
தோ பெக்காதோ ஒரிஜினால்! - ஆமென்.

இதன் தமிழாக்கம் -

பரிசுத்த திவ்விய நற்கருணை நாதரும்,
ஜென்மப் பாவமில்லாமல் உற்பவித்த
அமல உற்பவ கன்னியாகிய நமது அன்னையும்,
வாழ்த்தப்படுவார்களாக - ஆமென்.

**- பெர்க்மான்ஸ் மோத்தா**



**கலாபன் வாஸ்**
94863 90793


நம் திருச்சபை, நமது பெருமை - 3

# அறிவியலும், திருஅவையும்!

நம் தாய்த் திருஅவையைப் பற்றிப் பெருமிதம் கொள்ள பல உண்மைகள் உள்ளன. அறிவியலைத் தன் ஆன்மீகத்தோடு இணைத்துக்கொள்வது அவற்றில் ஒன்று. இருக்கின்ற அனைத்து சமயங்களிலும் அறிவியலோடு அதிகம் இணைந்து செல்லும் சமயம் கிறித்தவம்தான். கிறித்தவ சபைகளிலும் அறிவியலோடு கைகோர்த்துச் செல்வதில் முதலிடம் வகிப்பதும் நம் கத்தோலிக்கத் திருஅவைதான்.

**துறவியரும், அறிவியல் ஆய்வுகளும்.** திருஅவையின் தொடக்க நூற்றாண்டுகளில் துறவற சபைகள் தோன்றியபோது, துறவியரில் பலரும் செப, தவத்தோடு அறிவியல் ஆய்வுகளையும் மேற்கொண்டனர் என்பது நமக்கு வியப்பைத் தருமா? ஆனால், அது நடந்தது.

அறிவியல் மேதைகளின் பட்டியலைப் புரட்டி, அதில் எத்தனை எத்தனை துறவியரின் பெயர்கள் உள்ளன என்று எண்ணிப் பார்த்தால் மலைப்பாக இருக்கும். இருநூறுக்கும் மேற்பட்ட துறவியர் அறிவியல் துறையில் சாதனை படைத்திருக்கிறார்கள், அறிவியல் வானில் மின்னிக்கொண்டிருக்கின்றனர்.



**நிக்கொலாஸ் கோபர்னிகஸ்** (1473-1543) போலந்து நாட்டைச் சேர்ந்த கத்தோலிக்கர். இவர் வானவியல் துறையின் முன்னோடி, சூரிய மைய வெளியை அறிமுகப் படுத்தியதால் 'கோபர்னிகன் புரட்சி' என இவர் பெயராலே அழைக்கப்படும் பெருமை பெற்றார்.

**கிரகோரி மென்டல்** (1822-1884) பரிணாமக் கொள்கையை அறிமுகப்படுத்திய ஆஸ்திரிய நாட்டைச் சேர்ந்த புனித அகுஸ்தினார் சபைத் துறவி. மரபணுவியலின் முன்னோடி என்றும் அழைக்கப்படுகிறார்.





**ஆல்பர்ட் மாக்னஸ்.** தொமினிக்கன் சபைத் துறவியும் ஆயருமான இவர் 13 ஆம் நூற்றாண்டின் சிறந்த அறிவியலாளராகக் கருதப்பட்டார். உயிரியல், இயற்பியல் துறைகளில் சிறந்து விளங்கினார்.



**ரோஜர் பேகன்.** இவரும் 13ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பிரான்சிஸ்கன் துறவி, நவீன அறிவியலின் முன்னோடி என அழைக்கப் பட்டார்.

**ஆன்ட்ரு கார்டன்.** 18ஆம் நூற்றாண்டு பெனடிக்டைன் துறவி, மின்சார மோட்டாரின் தந்தை என்று அழைக்கப்படுகிறார்.

**பவுலோ கசாட்டி.** 17ஆம் நூற்றாண்டு இயேசு சபைத்துறவி, வானியல் வல்லுநர். நிலவில் உள்ள 'கசாட்டஸ்' என்னும் பள்ளம் இவர் பெயரால்தான் அழைக்கப்படுகிறது.

மேற்கண்ட துறவியர் மிகவும் பிரபலமானவர்கள். அறிவியலையும், ஆன்மிகத்தையும் இவர்கள் இரு கண்கள்போலக் கருதினர் என்பது நம்மைப் பெருமிதப்படுத்துகிறது.

இயேசு சபைத் துறவிகள் அறிவியல் துறைக்குப் பெரும் பங்களித்துள்ளனர் என்பது



மறைக்க முடியாத உண்மை. நில நடுக்கம் தொடர்பான ஆய்வுகளில் இயேசுசபையினர் செய்த பங்களிப்பைக் கருத்தில் கொண்டு நிலநடுக்கவியல் (Seismology) 'இயேசுசபையினரின் அறிவியல் துறை' ("the Jesuit science") என்று அழைக்கப்படுவது எத்துணை பெருமைக்குரியது!

